506

Boys of Many Lands.

6- SEP 1929 MADRAS

BY

P. SUNDARARAJAN, B. A., L. T.,

History Assistant,

Kshatriya Vidhyasala High School,

VIRUDHUNAGAR.

MADURA:

E. M. GOPALAKRISHNA KONE

All Rights Rvd.] 1929. [Annas 3.

ELSIOR PRESS, MADURA.

TB
031.6
N29
176854

பல நாட்டுச் சிறுவர்.

3230
கிபி 813

விருதுநகர்,
கூஷித்திரிய வித்தியா சாலைச் சரித்திராசிரியர்
பி. சுந்தரராஜன் B.A., L.T.
எழுதியது.

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

இரண்டாம் பதிப்பு.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புக்ஷாப், வடக்குச்சித்திரை வீதி,
மதுரை.

1929.

ரிஜிஸ்தர் செய்தது.] [விலை அணு 0—3—0

176824



நூற்பயன்.

உள்ள படிநாம் உணருங் காலே
பள்ளிச் சிறுவர்தம் பாட புத்தகம்
கதைகள் விரவிய கட்டுரை எனிலோ
விதையறி விற்கென மிளிருதல் கண்டோம்.
பெரியோர் செய்துள பெருஞ்செய லெல்லாம்
தெரியக் கற்றதில் தேர்ச்சி பெறுகிற
சிறுவர்கள் தம்மொத்த சிறுவர்முன் செய்துள
உறுதிசால் பற்பல உண்மைக் கதையெனில்
உற்சா கத்துடன் ஊன்றிப் படித்து
மெச்சி அதன்படி விரும்பி நடத்தற்கு
முயலுவார் என்பதை மொழிதலும் வேண்டுமோ?
நயம்பெறு பலநாட்டுச் சிறுவர் நண்ணிய
அரிய செய்கைகள் அனேத்தையும் ஆங்கிலப்
பெரிய சரிதையிற் பெருக்க மொழிபெயர்த்து
மாணவர்க் கெனவிது வழங்கிய படியான்
பேணுமா சிரியர் பிரியமா யேற்றொரு
பாடமா வைத்துப் படிப்பித்து
நாட அறிவுவர்க்கு நல்குவர் மிகவே.

இங்ஙனம்,

நா. கிருஷ்ணசாமி நாயுடு,

தமிழ் வித்வான்,

மதுரை.

முகவுரை.

சிறுவர்கள், வயது சென்றவர்களின் குணம், செயல் முதலியவற்றைக் கேட்பதினும், தங்களோடு ஒத்த வயதினர்களின் குணம் செயல் முதலியவைகளைப் பற்றிக் கேட்பதில் மிகுதியும் விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்களென்பது அனுபவத்தில் யாவரு மறிந்த விஷயம்.

ஆதலால் நம் நாட்டுச் சிறுவர்களைப் பற்றிப் படிப்பதோடு நில்லாமல் அயல் நாட்டுச் சிறுவர்களைப் பற்றியும் படித்து அவர்களுடைய நற்குண நற்செய்கைகளைக் கைப்பற்றிப் பள்ளியிற் பயினும் நம் பாலர்கள் பயனுற வேண்டுமென்பது எனது நோக்கம்.

அந்நோக்கத்துடனேயே 'பலநாட்டுச் சிறுவர்' என்ற இச் சிறுநூலை வெளியிடத் துணிந்தேன். இதனை ஆசிரியர் தத்தம் கலாசாலைகளில் ஆதரித்து நம் சிறுவர்கள் பயனுறச் செய்வார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

பி. சுந்தராஜன்,

ஆக்கியோன்.

பொருளடக்கம்.

பக்கம்.

I. தந்தை சொற் காத்தோர்.

1. தந்தை சொற்படி நடந்த சிறுவன் ... 1
2. கஸபியான்கா 3

II. உண்மையால் உயர்ந்தோர்.

3. ஜார்ஜ் வாஷிங்டன் 5
4. கோல்பெர்ட் 6

III. தந்தை தாய்ப் பேணியோர்.

5. அரங்கநாதன் 9
6. லிபஸ்டியான் 11
7. குவின்டஸ் ஸிஸரோ என்பவரின் உத்தம புத்திரன் 14
8. அனப்பியஸும் ஆம்பிநோமஸும் 16

IV. திருட மறுத்தோன்.

9. இன்வர்ஸன் 17

V. உழைப்பால் உயர்ந்தோர்.

10. ஆல்பிரட் 19
11. நெப்போலியன் 21
12. ஐஸக்நியூட்டன் 23
13. ஈசுவர சந்திரன் 25

VI. தைரிய முள்ளோர்.

14. தேசிங்கு 27
15. நெல்சன் 29
16. டெல் என்பவனின் புத்திரன் ... 31
17. எட்வர்ட் 34

VII. ஜீவகாருண்ணியம் உள்ளோர்.

18. ஸபக்டஜின் 35
19. கௌதமன் 36

VIII. தேசாபிமானம் உள்ளோன்.

20. கெயஸ்மியூஷியஸ். 38

OFFICE OF THE
No.
6- SEP 1929
MADRAS

பல நாட்டுச் சிறுவர்.

தந்தை சொற்படி நடந்த சிறுவன்.

—o—

பிள்ளைகளே! 'தந்தை சொல் மிக்க மந்திர மில்லை' என்று நீங்கள் படித்திருக்கிறீர்கள் அல்லவா! நாம் தகப்பனருடையவார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும். அவருடைய வார்த்தைகளை முற்றிலும் நம்பி எதிர் வார்த்தை பேசாமல் உடனே அதன்படி நடந்தால் நாம் அதிக நன்மை அடைவோம். உதாரணமாகத் தன் தந்தையின் கட்டளையைத் தலைமேல் தாங்கி, அதன்படி நடந்து தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்ட ஒரு சிறுவனின் கதையைச் சொல்லுகிறேன், கேளுங்கள்!

ஐரோப்பாக் கண்டத்தில் 'பிரஷ்யா' என்று ஒரு தேசமிருக்கிறது. அங்கு சில வருடங்களுக்கு முன் ஒருவர் வசித்து வந்தார். இருப்புப் பாதையில் புகை வண்டித்தொடர் வரும் பொழுது, அதைச் சரியான வழியில் செலுத்துவதே அவருடைய வேலை.

ஒரு நாள் புகை வண்டித்தொடர் வேகமாக வந்துகொண்டிருந்தது. அது வரும் திசையை நோக்கி, அவருடைய குழந்தை இருப்புப்பாதை

யின் நடுவில் வந்துகொண்டிருப்பதைக் கண்டார். ஓடி அதைக் காப்பாற்றுவதற்கோ நேரம் இல்லை. வண்டித் தொடர் அதிக சமீபத்தில் வந்துவிட்டது. குழந்தை தப்புவது கஷ்டம் என்று அவர் அறிந்தார். என்செய்வார்?

ஆனால் அக்குழந்தையோ தந்தையின் சொல்லைத் தட்டாமல் கீழ்ப்படியும் குணமுள்ளது. இதைத் தந்தை நன்கு அறிந்தவர். அதனால் குழந்தையை நோக்கி "நீ படுத்துக்கொள்" என உரத்த குரலில் கட்டளையிட்டார். அக்குழந்தையும் உடனே தண்டவாளங்களுக்கு நடுவே படுத்தது. வேகமாய் வந்த வண்டித்தொடரும் சென்றது. தகப்பனர் மிகவும் பரபரப்புடன் தம் குழந்தை இருந்த இடம் நோக்கி ஓடினர்; காயம் ஒன்று மில்லாமல் குழந்தை உயிருடன் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். குழந்தையும் தகப்பனரைக் கண்டு ஆனந்தமடைந்து தந்தையே! நான் இனி எழுந்திருக்கலாமா?" என்று கேட்டது.

பிள்ளைகளே! தந்தை சொல்லுக்குத் தடையின்றிக் கீழ்ப்படிந்ததால் அல்லவோ அக் குழந்தை பிழைத்தது! ஆகவே,

'தந்தை சொல் மிக்க மந்திர மில்லை.'

---

(2) கலபியான்கா.

பிள்ளைகளே! போனபாடத்தில் தந்தை சொற்படி நடந்து உயிர் தப்பிய குழந்தையின் கதையைப் படித்தீர்கள். இப்பாடத்தில் தன் தந்தையின் கட்டளையை மீறி நடக்க மனமில்லாமல் தன் உயிரையே இழந்த கலபியான்கா என்னும் சிறுவனைப் பற்றிப் படிப்போம்.

ஐரோப்பாக் கண்டத்தில் 'பிரான்சு' என்று ஒரு தேச மிருக்கிறது. நெடு நாளைக்கு முன் அத்தேசத்தில் கலபியான்கா என்னும் ஒரு கப்பல் தலைவன் இருந்தான். அவனுடைய மகன் கலபியான்கா. அவன் தந்தை சொற்படி நடக்கும் தனயன்; மிகுந்த தைரியமுடையவன்.

ஒரு சமயம் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக் காரருக்கும் ஒரு கடுமையான கப்பல் போர் நிகழ்ந்தது. கலபியான்காவும் தன் தந்தையுடன் அவர் கப்பலில் சென்றான். சண்டை நடக்குமுன் தகப்பன் தனயனைக் கப்பலின்மேல் தட்டில் நிறுத்தி "என் உத்திரவு இல்லாமல் இந்த இடத்தினின்றும் இம்மியும் நகரக் கூடாது" என உத்திரவிட்டான். பின்பு அவன் எதிரியோடு யுத்தம் செய்து சண்டையில் இறந்தான். இந்தச் சமாசாரம் பையனுக்குத் தெரியாது. அவன் அவ்விடத்திலேயே நின்றான்.

கப்பல் தலைவன் இறந்தபின் கப்பல் தீப் பற்றியது. அதிலிருந்தோர் உயிர் தப்ப எண்ணி, சிறு ஓடங்களில் ஏறி ஓடினர். ஓடும்போது பையனையும் தங்களுடன் வர அழைத்தனர். அவனை பிதாவினுடைய உத்திரவன்னியில் அவ்விடம் விட்டு நகர மறுத்து விட்டான்.

கப்பலில் பிடித்த தீ, இவனை நெருங்கிற்று. அப்போது அவன் "தந்தையே! நான் இவ் விடம் விட்டுப் போகலாமா" எனக்கேட்டான். பதில் ஒன்றும் கிடைக்க வில்லை. தீ இவனது ஆடையிற் பற்றியது. அப்பொழுதும் அவன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தானில்லை. "நான் இனியாவது இவ்விடம் விட்டு ஓடலாமா" எனக்கதறினன். பதில் இல்லை. தீயும் இவனைச் சூழ்ந்து எரிந்தது. மூன்றும் முறையும் இவன் தைரியத்துடன் தந்தையைக் கூவியழைத்தான். உயிரில்லாத் தந்தை எங்ஙனம் பதிலளிப்பான்! "தான் அவ்விடம் இருப்பதே தந்தையின்பிரியம் போலும்" என எண்ணித் தைரியத்துடன் அங் கேயே நின்று கலபியான்கா உயிர் துறந்தான்.

பிள்ளைகளே! இவனன்றே உலகில் உத்தம புத்திரன். தந்தையின் கட்டளையைத் தலைமேல் தாங்கி உயிரை விட்டதலைன்றே இன்றைக்கும் இவனை இவ்வுலகம் புகழ்கின்றது! ஆகவே,

"தகப்பன் சொல்லை சால்வ தாகும்"

———

(3) ஜார்ஜ் வாஷிங்டன்.

அமெரிக்காக் கண்டத்தில் 'ஐக்கியமாகாணத்தில்' ஜார்ஜ் வாஷிங்டன் என்னும் பையன் ஒருவன் இருந்தான். அவன் நல்ல குணங்கள் அனைத்தும் உடையவன். ஆதலால் ஒரு நாளும் பொய் பேசுகிறதில்லை. உண்மை பேசுவதனால் கஷ்டம் நேரிடுமானாலும் அதைப் பொருட்படுத்தாமல் அதனையே பேசி வருவான்.

ஒரு நாள் அவனுடைய பிதா அவனுக்கு ஒரு கத்தி இனாமாகக் கொடுத்தார். அது கூர்மையாய் இருக்கிறதா என்று பார்க்க ஜார்ஜ் ஆசை கொண்டான்; பிறகு தோட்டத்திற்குச் சென்றான். அங்கு தன் தகப்பனார் அருமையாய் வளர்த்து வந்த சில செடிகளை அக் கத்தியால் வெட்டினான். தன் கத்தி மிகவும் கூர்மையுள்ளதென நினைத்து அகமகிழ்ந்தான்.

சற்று நேரங் கழித்து அவனுடைய தந்தை தோட்டத்திற்குள் சென்றார். தாம் அருமையாய்ப் பாதுகாத்து வந்த செடிகள் வெட்டப்பட்டிருந்ததைக் கண்டார்; மெய் வேர்த்தார்; சினங்கொண்டார்; பின்னர் தனது மாளிகையை நோக்கித் திரும்பினார். அவ்விடமுள்ள பணியாளர்களை நோக்கிச் "செடிகளை யாரோ வெட்டியிருக்கிறார்கள். இத்துஷ்டத்தனமான காரியம்

செய்தவரைக் கண்டு பிடித்துத் தண்டிக்க வேண்டும்'' என்று கோபமாய்ச் சொன்னர். இக் கோப வார்த்தைகளைக் கேட்டவுடன் அருகில் இருந்த சிறுவனை ஜார்ஜ் நடுங்கினன். ஆனல் பொய் சொல்ல அவனுக்கு இஷ்டமில்லை. தகப்பனரிடம் வந்தான். ''தந்தையே! நானே அச் செடிகளை வெட்டினேன். எனக்குப் பொய் சொல்ல இஷ்டமில்லை. என்னைத் தாங்கள் மன்னிக்கவேண்டுகிறேன்'' என்றான். இதைக் கேட்டவுடன் தந்தையின்கோபம் தணிந்தது. பையன் உண்மை பேசியதற்காகச் சந்தோஷப் பட்டார்.

பிள்ளைகளே! உண்மை பேசுகிறவர்களை எல்லோரும் நேசிக்கிறார்கள். ஜார்ஜ் எப் பொழுதும் உண்மை பேசியதால் அவனை எல் லோரும் நன்கு நேசித்தார்கள் அவன் நாளடை வில் ஒரு பெரிய பதவிக்கு வந்தான்.

''உண்மை பேசுதல் நன்மையைத் தரும்''

---

(4) கோல்பேர்ட்.

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள 'பிராஞ்சு' தேசத்தில் கோல்பெர்ட் என்னும் உண்மை யுள்ள சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் அதிக ஏழைக் குடும்பத்திற்பிறந்தவன். அவனது தந்தை அவனைப் படிக்க வைக்கவும் சக்தி இல்

லாதிருந்தார். அதனல் அவனே ஓர் ஜவுளிக் கடையில் வேலைக்கு அமர்த்தினர்.

இவனுடைய எஜமானன் பேராசையுள்ள வன். பணத்தை நல்ல வழியிலோ, கெட்ட வழியிலோ சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ண முடையவன். பொய் சொல்லியும் பொருளைச் சேர்ப்பவன். அவனுக்குப் பொருளே பெரிது.

ஒரு நாள் சில ஜவுளி தினுசுகளை ஒரு கன வானின் பார்வைக்கு அனுப்ப வேண்டி யிருந் தது. அதனல் கோல்பெர்ட்டின் எஜமானன் நல்ல நான்கு ஜவுளி தினுசுகளை எடுத்து ஓர் வேலையாள் வசம் அனுப்பினன். அவனுடன் விலை தீர்த்துப் பணம் பெற்று வரும்படிக்குக் கோல்பெர்ட்டையும் கூட அனுப்பிவைத்தான்.

அக்கனவான் ஜவுளி தினுசுகளைப் பார்வை யிட்டார்; ஒரு தினுசை விலைக்கு வாங்கிக்கொண் டார். அதன் விலை ஒரு பவுன் என்று கோல் பெர்ட் சொல்ல அக்கனவான் முப்பது கஜம் பட்டை வாங்கிக் கொண்டார். முப்பது பவு னுடன் கோல்பெர்ட் வந்தவுடன் எஜமான் "நீ சரியாய் விலை சொல்லிப் பணம் பெற்று வந் தாயா! ஏதாவது தப்பிதம் செய்து விட்டாயா?" என்று பரபரப்புடன் வினவினன். கோல்பெர்ட் டுடன் சென்ற வேலையாளும் "எஜமானே! கோல்

பெர்ட் ஒரு தப்பிதம் செய்துவிட்டான்!'' என்று பணிவுடன் பகர்ந்தான். இதைக் கேட்டவுடன் முதலாளிக்கு வந்த கோபத்திற்கு அளவில்லை. கோல்பெர்ட்டை அவன் அதிக கோபத்துடன் நோக்கிச் ''சோம்பேறிப் பயலே! எனக்குத் தெரியுமே! என்ன தப்பிதம் செய்தாய்! நீ ஒன்றுக்கும் உதவமாட்டாய். உன் சம்பளத்தில் மண்ணைப் போடுகிறேன்'' என்று கொடூரமாய்ப் பேசினான்.

இதைக் கேட்ட பணியாளன் ''ஐயா! தங்களுக்கு ஒன்றும் நஷ்டம் உண்டாகவில்லை. கஜும் அரைப் பவுனே விலையுள்ள பட்டை ஒரு பவுனுக்கு விற்றுப் பணத்தைக் கொண்டு வந்திருக்கிறான் கோல்பெர்ட்' என்றான்.

இதைக் கேட்டவுடன் எஜமானனுக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை. ''கோல்பெர்ட்! நீ மிகவும் கெட்டிக்காரன். வியாபாரத்தில் முன்னுக்கு வருவாய். பணத்தைக்கொடு'' என்று கேட்டான்.

அப்பொழுதுதான் கோல்பெர்ட் தான் செய்த தப்பிதத்தை உணர்ந்தான். தான் அறியாமையால் அக்கனவானை ஏமாற்றியதை நினைத்து வருந்தினான். அவர் பணத்தைத் தன் எஜமானிடம் கொடுப்பது பிசகென நினைத்தான்; உண்மையை உரைத்து அக்கனவானிடம் மன்னிப்புப்

பெறுவதே உசிதமென உணர்ந்தான். ஓரே ஓட்ட மாய் அக்கனவான் வீட்டை நோக்கி ஓடினன்; கனவானைக் கண்டு தான் தெரியாமல் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினன்; அதிகமாகப் பெற்ற பவுனையும் திருப்பிக்கொடுத் தான். பையனுடைய நன்னடக்கையைக் கண்ட கனவான் சந்தோஷங் கொண்டார்.

பின்பு அவனை நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்ற சாதனங்களைச் செய் தார். கோல்பெர்ட்டும் நன்முயற்சியுடித்து யாவரி லும் சிறந்து விளங்கினன்.

"உண்மையே உயர்வைக்கொடுக்கும்."

---

(5) அரங்கநாதன்.

நம் சென்னை இராஜதானியில் சித்தூர்க்கு அடுத்த ஒரு சிறு கிராமத்தில் அரங்கநாதன் ஒரு ஏழைக்குடியில் பிறந்தவன். இவனது தந்தை மிகவும் எளியவர். ஒரு சமயம் அவன் தந்தை அரசனுக்குக் கொடுக்க வேண்டிய குத்தகைப் பணம் செலுத்தத் தவறியதால் சித்தூர் ஜெயி லுக்கு அனுப்பப்பட்டார். அப்போது அரங்க நாதனுக்கு வயது பத்து.

தந்தை ஜெயில்சென்ற கொஞ்ச நாளையில் அவர் தம் பிதாவுக்குச் செய்யவேண்டிய 'திதி'

தினம் வந்தது. அதற்குத் தம் கணவன் வர முடியாததைப்பற்றி அரங்கநாதனின் தாய் வருந்தி அழுதுகொண்டிருந்தாள். அரங்கநாதன் அச்சங்கதியை அறிந்தான். உடனே ஒரே ஓட்டமாகச் சித்தூர் நோக்கி ஓடினான்.

அவ்விடம் ஜில்லா நியாயாதிபதியாயிருந்த துரையிடம் சென்றான். அழுத கண்ணுடன் அவரை அணுகித் தன் தந்தையை அன்றைக்குத் திதிசெய்ய வீட்டிற்கு அனுப்பும்படி மன்றாடிக் கேட்டுக்கொண்டான். சிறுவனுக்குப் பிதாவின்மீது இருந்த பிரியத்தைக் கண்ட துரை, "உன் தகப்பனுரை இன்று ஊர் செல்ல அனுமதியளிக்கிறேன். ஆனல் அவருக்குப் பதில் ஒருவர் சிறையில் இருக்கவேண்டுமே? என்றார். உடனே அரங்கநாதனும் முன் பின் யோசியாமல் "நான் சிறையில் இருக்கிறேன்; என் தந்தையைப் போகவிடுங்கள்" என்றான். இதைக் கேட்ட துரைக்கு அதிக வியப்பும் இரக்கமும் உண்டாயிற்று. உடனே அவன் தந்தையை ஜெயிலிலிருந்து விடுவித்துப் பையனுடன் ஊருக்கு அனுப்பினர். பின்னர் தந்தையும் தனயனும் வீடுசென்றனர். அங்கு அவன் பிதாவும் செய்ய வேண்டிய காரியத்தைச் செவ்வனே செய்து முடித்தனர். அரங்கநாதனது தாயும் அடைந்த சந்தோஷத்திற்கு அளவில்லை. பின்

ளைகளே! பத்து வயதுள்ள அரங்கநாதனுக்குத் தன் தந்தையிடம் இருந்த உண்மையான பிரியத்தைப் பார்த்தீர்களா! தன் தந்தையின் பொருட்டுத் தான் கஷ்டப்படவும் நினைத்தானன்றே! சிறுவயதிலேயே தன்னலங் கருதாத அரங்கநாதன், நாளடைவில் பெரிய உத்தியோகங்களைப்பெற்று நாடு போற்ற விளங்கினன்.

"தந்தையைத் தாயைச் சந்ததம் போற்று"

---

(6) ஸிபஸ்டியான்.

ஐரோப்பாக் கண்டத்தில் 'ஸ்பெயின்' தேசத்தில் சித்திர ஆசிரியன் ஒருவன் இருந்தான். அவன் சித்திரம் எழுதுவதில் மகா சமர்த்தன். ஆதலால் அவனிடம் அநேக மாணவர்கள் சித்திரம் வரையக் கற்றுக்கொண்டிருந்தனர். அந்த ஆசிரியன் செல்வந்தனாய் இருந்ததால் அநேக அடிமைகளை விலைக்கு வாங்கினன். அந்த அடிமைகளில் ஒருவன்மகன் ஸிபஸ்டியான் என்னும் பெயரையுடையவன். அவன்மிகவும்சிறுபையன்.

சித்திரம் வரையக் கற்பிக்கப்படும் இடத்தில் ஸிபஸ்டியான் நின்று ஆசிரியர் சொல்வதைக் கவனமாய்க் கேட்பது வழக்கம். அப்பையனுக்கு அதனைக் கற்பதில் அதிக ஆசை இருந்தது. அதனால் அவனுக்கு உபாத்தியாயர் சொல்வதைக் கேட்டதிலிருந்தே மிகுந்த அறி

வுண்டாயிற்று. இரவு நேரங்களில் தனிமை யாய் இருக்கும்போது தானும் சித்திரப் படங் களை வரைவான். இவ்வாறு செய்துவந்ததால் அவன் சித்திரம் எழுதுவதில் வல்லவனானன்.

இவன் எழுதிய சித்திரங்களை அவன் முற்றி லும் அழித்துவிடுவதில்லை. ஆதலால் காலையில் பள்ளிக்கூடம் வரும் பையன்கள் அவைகளைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். அல்லாமலும் அவைகளை எழுதியவர் யார் என அறிந்து கொள்ளுதற்கு ஆவல் கொள்ளுவார்கள்.

ஓர் இரவு லிபஷ்டியான் 'மேரி' அம்மை யின் படத்தை வரையலானன். அதில் அவன் காட்டிய சிரத்தை அதிகம். நாழிகையானதை அவன் அறியவில்லை. படம் நேர்த்தியாய் இருந்ததாலும், மேலும் மேலும் அதை விருத்தி செய்ய ஆவல் கொண்டதாலும், அவன் பொ ழுது விடிந்ததையும் உணரவில்லை. பள்ளிக்கூ டம் வந்த பையன்களும், உபாத்தியாயரும் அவன் பின் சந்தடிசெய்யாமல் நின்றார்கள். தன் மனதிற்குத் திருப்தியாய்ப் படம் முடிந்த வுடன் லிபஷ்டியான் பின்னல் திரும்பினன். நின்ற கூட்டத்தைக்கண்டு நடுங்கினன். அடி மையாகிய தான் எஜமானருடைய உத்தரவில் லாமல் படம் வரைந்ததற்கு அவர் எது செய் வாரோ எனப் பயந்து ஏங்கினன்.

உடனே ஸிபஸ்டியானுடைய எஜமான் அவனைநோக்கிச் ''சித்திரம் எழுதுவதை உனக்குக் கற்பித்தவர் யார்'' என்று கேட்டார். 'தாங்களே என்னுடைய குரு' என்றான் ஸிபஸ்டியான் ''நான் உனக்கு ஒரு நாளும் பாடம் கற்பிக்கவில்லையே'' என்றார் எஜமானன். ஸிபஸ்டியான் ''எனக்கென்று பாடம் கற்பிக்காவிட்டாலும் மற்றவர்களுக்குப் பாடம் கற்பிக்கும்பொழுது கவனமாய் கேட்டுக் கொண்டிருந்தேன். இராக்காலங்களிலும் தனியேசித்திரம் எழுதிப் பழகினேன்; அதனல் எதோ கொஞ்சம் அறிந்தேன்'' என்று பணிந்து கூறினன்.

இதைக்கேட்ட சித்திர ஆசிரியன் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவில்லை. ஸிபஸ்டியானுடைய புத்திக் கூர்மையை வியந்தான். அவனுக்குப் படிப்பின்மேலிருந்த ஆசைக்கு ஆச்சரியப்பட்டான். பின் அவன் ''ஸிபஸ்டியான்! உனக்கு வேண்டிய வரம் ஒன்று கேள்! அதை நான் உடனே உனக்கு அளிப்பேன்!'' என்றான்.

இதைக்கேட்டவுடன் 'ஸிபஸ்டியான் என்னகேட்கப் போகிறானே' எனப் பையன்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். அவன் தனக்கு ஒன்றையும் கேட்கவில்லை. கேட்டோர் வியக்க, ''என் வயதுசென்ற அருமைத்தந்தையை நீங்கள் அடிமையினின்றும் விடுவிக்கவேண்டும்''

என்றான். இதை எதிர்பாராத எஜமானும் பையனுக்குத் தந்தையிடம் இருந்த அன்பை வியந்து உடனே அவன் தந்தையை விடுதலை செய்ததோடு, ஸிபஸ்டியானையும் விடுதலை செய்தான். அவன் பின் உலகம் போற்றும் சித்திர ஆசிரியனாக ஆனான். பிள்ளைகளே! ஸிபஸ்டியானுக்குத் தன் தகப்பன் பேரிலிருந்த பிரியத்தையும் அன்பையும் பார்த்தீர்களா!

"தந்தையைப் போற்றும் தனயனே பேரியவன்."

---

(7) ஓர் உத்தம புத்திரன்.

ஐரோப்பாக் கண்டத்தில் 'இத்தாலியா' என்று ஒரு தேசமிருக்கிறது. அதன் தலைநகர் ரோமாபுரி. அதில் ஒரு காலத்தில் குவின்டஸ் ஸிஸரோ என்பவர் வசித்துவந்தார். அவருக்கு ஒரு புத்திரன் இருந்தான். அவன் அதிகச் சிறுவனாயிருந்தபோதிலும் மிகுந்த தைரியசாலி; தந்தையிடத்தில் அதிக பக்தியும், உள்ளன்பும் உள்ளவன்.

அக்காலத்தில் ரோமாபுரியை அரசாண்டு வந்த கொடுங்கோல் மன்னர்கள் குவின்டஸைக் கொலைசெய்ய ஆட்களை ஏவினர். இதையறிந்த அவர், தன்னைத் தன் மகன் தவிர ஒருவரும் காணமுடியாத இடத்தில் ஒளிந்து கொண்டார்.

அவரைப் பிடிக்கவந்தவர்கள் பல இடங்களிலும் தேடி அலுத்துப் போயினர். பின், அவர்கள் பையனைப் பிடித்துப் பிதா இருக்கும் இடத்தைக் காட்டும்படி துன்புறுத்தினர். அவன் ஒரே பிடிவாதமாய் அவர் இருக்கும் இடத்தைக் காட்ட மூடியாதென்று சொன்னன். கொடியவர்களான அப் பாதகர்கள் அவனைத் தீப் பந்தத்தினால் அநேக இடங்களில் கொளுத்தினர்கள். அவ்வளவு துன்பத்தையும் பொறுத்துக்கொண்டு அப் பையன் பிதா ஒளித்திருந்த இடத்தைக் காட்ட மறுத்தனன். பின்னும் அவர்கள் அவனைக் கத்தியால் பல இடங்களிலும் வெட்டிச் சித்திரவதை செய்தனர். அப் பொழுதும் அச்சிறுவன் தன் தந்தையைக் காட்டிக் கொடுக்கவில்லை. பிள்ளைகளே! இப் பையனின் தைரியத்தையும் அவனுக்குப் பிதாவின் பேரில் இருந்த பிரியத்தையும் பார்த்தீர்களா! தன் உயிரையும் கொடுத்துத் தன் பிதாவைக் காப்பாற்றிய இச் சிறுவனை நாம் "சற்புத்திரன்" என்று சொல்லத் தடையென்ன!

"சத்தியந் தவறுன்" உத்தம புத்திரன்.

———

(8) அனட்பியஸும் ஆம்பிநோமஸும்.

பிள்ளைகளே! போன பாடத்தில் இத்தாலியா தேசத்திலுள்ள ரோமாபுரியில் நடந்த ஒரு கதையைப்பற்றிப் படித்தோமல்லவா. அத் தேசத்தில் எட்ஞ என்று ஒரு பெரிய எரிமலை இருக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

எரிமலை என்றால் என்ன? பிள்ளைகளே! எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும் மலை என்று நீங்கள் நினைக்கக்கூடாது. எரிமலையின் உச்சியிலிருந்து அடிவரை ஒரு புகைப்போக்கி போன்ற அகன்ற வாய் இருக்கிறது. அதன் வழியாகச் சிலசமயங்களில் அக்கினி வெளிப்படும். சூடான கற்களும் வெளிப்படும். உஷ்ணத்தால் கற்கள் குழம்பாகும். கற்குழம்பு நாலா பக்கங்களிலும் சிதறி வழிந்தோடும்.

எட்ஞ எரிமலை மிகப் பெரிது. அந்த எரிமலையின் உள்ளிருந்து வரும் அக்கினியாலும், வழிந்தோடும் கற்குழம்பாலும் அனேக ஊர்கள் பாழாகும். எட்ஞ அக்கினியைக் கக்குகிறதென்று தெரிந்தால் அம்மலையைச் சுற்றிலுமுள்ள கிராமத்தில் வசிக்கும் ஜனங்கள் ஊரைவிட்டு உயிர் தப்பி ஓடுவது இயற்கை. ஓடும்போது அவர்கள் தங்களிடத்திருக்கும் விலையுயர்ந்த பொருள்களைத் தூக்கிக் கொண்டு செல்வதும் வழக்கம்.

ஒரு சமயம் எட்னாஎரிமலைதிடீரெனத் தீயைக் கக்க ஆரம்பித்தது. அப்பொழுது அக்கம் பக்கத்திலுள்ளோர் அரும் பொருள்களை எடுத்துக் கொண்டு விரைந் தோடினர்கள். அனப்பிய ஸும், ஓம்பிபிநோமஸும் அச்சமயம் எட்னா எரி மலையின் சமீபத்தில் வசித்துவந்தார்கள். அவர் கள் உத்தம புத்திரர்கள். எரிமலையின் உக்கிர மத்தைப் பார்த்தவுடன் அவர்கள் வேறு ஒரு பொருளைப் பற்றியும் நினைக்கவில்லை. தங்களு டைய வயது சென்ற தாய்தந்தையரையே நினைத் தனர். தாயை ஒருவனும், தந்தையை ஒருவனு மாகத் தூக்கிக் கொண்டு சென்றனர். கற்குழம்பா றும் இவர்கள் பாதையில் வரவில்லை. நால்வரும் உயிர் தப்பினர். பிள்ளைகளே! இச்சிறுவர்கள் விலையுயர்ந்தது என்று நினைத்த பொருள்கள் யாவை! பெற்றோர்களன்றே! ஆகவே, நீங்க ளும், பெற்றோர்களே பெருஞ் செல்வம் எனப் போற்றி வரவேண்டும்.

"மக்கட்குச் செல்வம் மாதா பிதாக்கள்."

---

(9) இன்வர்ஸன்.

அமெரிக்காவில் 'சிக்காகோ' என்னும் நக ரில் இன்வர்ஸன் என்னும் பையன் ஒருவன் வசித்துவந்தான். அவன் உண்மையே பேசு வான்; பிறர் பொருளைத்தொடவும் இஷ்டப்பட மாட்டான்; நல்ல குணமுடைய பையன்.

ஒரு நாள் அவன் தங்கள் பசுமாட்டை ஓட்டிக்கொண்டு புல் தரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். போகும் வழியில் ஒரு சிற்றாறு இருந்தது. அதன் கரையில் சில துஷ்டப்பையன்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் மகா கெட்டவர்கள்; சோம்பேறிகள். அருகிலிருந்த தோட்டத்தில் பழந்தரும் மரங்கள் இருந்தன. அப்பழங்களைத் திருட எண்ணினார்கள். அச்சமயம் இன்வர்லன் அவ்விடம் வந்தான். வந்ததும் அவனை மரத்தில் ஏறிப் பழங்களைத் திருடச் சொன்னார்கள். அதைக் கேட்ட சிறுவன் 'நான் பிறர் பொருளை அபகரிக்கமாட்டேன். அப் பழங்கள் எனக்குச் சொந்தமானதல்ல. ஆகையால் நான் அவைகளைப் பறிக்கமுடியாது'' எனத் தைரியமாய்ச் சொன்னான். இதைக்கேட்டவுடன் அவர்கள் '' நீ கட்டாயம் அப்பழங்களை எங்களுக்காகத் திருடித்தான் வேண்டும்'' என்றார்கள். ''அது என்னால் முடியவே முடியாது'' என்றான் இன்வர்லன். துஷ்டர்கள் அவனை அந்த ஆற்றில் தள்ளி அமுக்குவதாகப் பயமுறுத்தினர். என்ன சொல்லிப் பயமுறுத்தியும் அவன் அவர்கள் கருத்திற்கு இசையவே இல்லை.

அவனை அவர்கள் தண்ணீருக்குள் இழுத்துச்சென்றனர். ஆழமான மடுவில் அமுக்கினர்.

"இப்பொழுது என்ன சொல்லுகிறாய்" என் றார்கள். "முடியவே முடியாது. நான் திருட மாட்டேன்" என்றான். மறுபடியும் அவனைத் தண்ணீருக்குள் அமுக்கினார்கள். மறுபடியும் அவன் பழங்களைத் திருட மாட்டேனென்றான்.

கோபங்கொண்ட துஷ்டர்கள் அவனைத் தண்ணீருக்குள் அமுக்கியபடியே இருந்தனர். இன்வர்லனுக்கு மூச்சுத் தினறிற்று; மூச்சுவிட முடியாமல் கஷ்டப்பட்டான். சீக்கிரம் உயிர் போய்விடும் என்றும் அவனுக்குத் தெரிந்தது. திருடக்கூடாதென நினைத்த அந்த நல்ல பையன் திருட முடியாதென மறுத்துவிட்டான். உயிரையும் துறந்தான். அப்பொழுது அவனுக்கு வயது பதின்மூன்றே யாகும்.

பிள்ளைகளே! இச்சிறுவனை இன்வர்வனுக்கு இருந்த தைரியத்தையும் நற்குணத்தையும் பார்த்தீர்களா! ஆதலால் பிறர் பொருளை அபகரிப்பது கேவலமான காரியம். உயிர் போவதானாலும் திருடல் கூடாது.

"சீவனை விடினும் திருடவொண்ணாது."

---

10. ஆல்பிரட்.

பிள்ளைகளே! உங்களில் சிலர் "நமக்கும் படிப்பு வராது. நாம் பரீட்சையில் தேற முடியாது" என்று நினைக்கலாம். அப்படி நினைப்பது தவறு. ஒருவன் நன்கு உழைத்துப் படித்

தால் கட்டாயம் பரீட்சையில் தேறுவான்; வகுப்பில் முதல் பையனாகவும் இருப்பான். "ஊக்கமது கைவிடேல்" என்பதை ஞாபகத்தில் வைத்து விடா முயற்சியுடன் உழைத்தால் நாம் எக்காரியத்திலும் ஜெயம் பெறுவது திண்ணம்.

அநேக வருடங்களுக்கு முன் ஆல்பிரட் என்னும் அரச குமாரன் இங்கிலாந்தில் இருந்தான். அவனுக்கு வயது பன்னிரண்டு. ஆனாலும் அவனுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. அக்காலத்தில் அங்குள்ள அரசர்கள் வில்வித்தை, வாள்வித்தை முதலிய யுத்தப் பயிற்சிகளைக் கவனித்தார்களே ஒழியப் படிப்பைப் பற்றி விசேஷமாகக் கவனிக்கவில்லை.

இப்படி இருந்தும் ஆல்பிரட் அரச குமாரனுக்குக் கல்வி கற்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. ஒருநாள் அவனுடைய தாயார் ஒரு புத்தகம் வைத்திருந்தாள். அதில் அழகிய படங்கள் வரையப்பட்டிருந்தன. அந்த அழகிய புத்தகத்தை ஆல்பிரட்டும், அவனுடைய மூத்த சகோதரர்களும் தங்களுக்குத் தந்துவிடும்படி தாயாரைக் கேட்டார்கள். தாயாரும் "உங்களில் முன்னால் இப்புத்தகத்தை வாசிக்கக் கற்றுக்கொள்கிறவனுக்கே நான் இந்தப் புத்தகத்தைத் தருவேன்" என்றாள்.

ஆல்பிரட்டின் மூத்த சகோதரர்கள் சோம் பேறிகள். ஆகையால் அவர்கள் தங்களால் அப்புத்தகத்தை வாசிக்கக் கற்றுக்கொள்வது கஷ்டம் என எண்ணி, மௌனமாயிருந்தனர். ஆல்பிரட்டோ புத்தகத்தைத் தாயாரிடமிருந்து பெற்றான். ஒரு உபாத்தியாயரிடம் போய் அப் புத்தகத்தைத் தனக்குக் கற்பிக்கும்படி கேட் டான். அவரும் சந்தோஷத்துடன் அவனுக் குக் கற்பித்தார். விடாமுயற்சியோடு படித்து வந்ததால், சில நாளில் ஆல்பிரட் அப்புத்தகத் தை முழுதும் தன் தாயிடம் வாசித்துக் காட்டி னான்; அதைப் பரிசாகவும் பெற்றான். இப்படி யே அவன் தான் எடுத்த காரியங்களிலெல்லாம் உழைத்து வெற்றி பெற்றான். முடிவில் அவனே இங்கிலாந்துக்கு அரசனும் ஆனான்.

"முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்"

---

11. நெப்போலியன்.

பிள்ளைகளே! முன் பாடத்தில் உழைப்பால் உயர்ந்த ஓர் அரச குமாரனைப் பற்றிப் படித் தோம். இப்பாடத்தில், ஓர் எளிய குடும்பத்திற் பிறந்தும், விடாமுயற்சியுடனும், ஊக்கத்துட னும் உழைத்துப் 'பிரான்சு' தேசத்திற்கே சக்கரவர்த்தியான நெப்போலியனின் சிறு பிரா

யத்தில் பள்ளிக்கூடத்தில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றிப் படிப்போம்.

நெப்போலியன் பிரான்சு தேசத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தான்; சிறு வயதிலேயே தன் தந்தையை இழந்தான். தன் குழந்தைகள் பேரில் அதிகப் பிரியமுள்ள அவன் தாயார், அவனைப் பள்ளிக்கூடம் அனுப்பினாள். பள்ளிக்கூடத்தில் நெப்போலியன் நன்றாக வாசித்து வந்தான். அவனுடைய புத்திக் கூர்மையையும், ஊக்கத்தையும் கண்ட அவனது உபாத்தியாயர்கள் 'அவன் ஒரு காலத்தில் அனைவரும் கொண்டாடத் தக்க உயர்ந்த பதவி அடைவான்' என்று சொல்லி வந்தனர்.

ஒரு நாள் அவனது உபாத்தியாயர் அதிகக் கஷ்டமான கணக்கு ஒன்றைப் பையன்களைச் செய்யும்படி சொன்னார். அதைச் செய்ய ஒருவராலும் முடியவில்லை. உபாத்தியாயரும் உடனே அக்கணக்கைப் பையன்களுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை. நன்றாய் யோசித்துக் கணக்கைத் தீர்த்து வரும்படி கட்டளை யிட்டார்.

நெப்போலியன் வீடு சென்றான். இரவு முழுவதும் அக்கணக்கைப் பற்றி யோசிக்கலானான்; சரியான விடை வரவில்லை. விடாமுயற்சியோடு மறுநாள் முழுவதும் அக் கணக்கைப்

பற்றியே சிந்தித்தான்; பிரயோஜனமில்லை. அதனல் அவன் மனந்தளரவில்லை; அன்றிரவிலும் அதைப் பூர்த்திசெய்ய அதிக ஊக்கத்துடன் முயன்றான். இப்படியாக மூன்று நாள் கஷ்டப்பட்டு ஒருவருடைய உதவியும் இல்லாமல் நெப்போலியன் தானே அக்கணக்கைச் செய்து முடித்தான். பிள்ளைகளே! சிறுவனன நெப்போலியன் உழைப்பால் ஜயமடைந்ததைப் பார்த்தீர்களா! அதனல் 'வருந்தினல் வாராததொன்றில்லை' என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

"முயற்சிக்குத்தக்க முன்னேற்றம் பெறுவோம்."

---

12. ஐஸக் நியூட்டன்.

சுமார் இருநூறு வருடங்களுக்கு முன் இங்லாந்தில் ஒரு சிறுவன் இருந்தான். அவன் பெயர் ஐஸக் நியூட்டன். அவன் மிகவும் உடல் மெலிந்தவனுப் இருந்தான். தன் வகுப்பில் ஐஸக் நியூட்டனே கடைசிப்பையன். அவனைக் கண்டோர் ஒன்றுக்கும் உதவாத முழுச்சோம்பேறிப்பயல் என்று நினைத்திருந்தனர். அவனுடன் படித்துவந்த மாணவர்கள் அவனைப் பரிகாசம் செய்துவந்தனர்.

ஒரு நாள் ஒரு பையன் ஐஸக் நியூட்டனை நன்முக உதைத்தான். அவனைப் பரிகாசம் செய்து வந்த மற்றய மாணவர்களும்,

இவனை அடித்த பையனுடன் சேர்ந்துகொண்டார்களே ஒழிய ஐலக்நியூட்டனுடன் சேரவில்லை; தான் படியாமல் முட்டாளாய் இருப்பதனால்தான் இவ்வாறு அவர்கள் செய்ய நேர்ந்தது என்று எண்ணினான். உடனே நன்றாகப் படித்து வகுப்பில் முதல் பையனாக வேண்டுமென்று நீர்மானித்தான். நீர்மானம் செய்ததோடு மட்டும் நின்றுவிடவில்லை. அப்பொழுதே அவன் சோம்பலை ஒழித்து முயன்றுபடித்தான்.

நாளடைவில் ஐலக் நியூட்டன் தன் வகுப்பில் முதல்வன் ஆனான். அம்மட்டோ! மேலும், மேலும் படிப்பில் மிகுந்த கவனத்தைச் செலுத்தினான். வெகு விரைவில் அப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பையன்கள் எல்லோரிலும் புத்தியில் மிக்கவன் ஆனான். அவனை அதுவரை இகழ்ந்து வந்த மாணவர்கள் அவனுடன் நேசம் பாராட்டினர். "ஒன்றுக்கும் உதவான்" என்று பலர் நினைக்கும்படி இருந்த ஐலக் நியூட்டன், பின், உலகத்தில் ஒரு பெரிய தத்துவ சாஸ்திரியானான். பிள்ளைகளே! இவனை இந்த உயர்ந்த பதவிக்குக் கொண்டு வந்தது எது? அவனுடைய உழைப்பும் விடாமுயற்சியுமன்றே! அதனால்தான் "உழைப்பின்வாராஉறுதிகள் உளவோ" என்றார் ஒரு பெரியார்.

"இருமுறை படிப்பவன் எல்லா முணர்ந்தவன்"

17824

13. ஈசுவர சந்திரன்.

ஈசுவர சந்திரன் 'கல்கத்தா' விற்குச் சமீபத்தில் உள்ள ஒரு கிராமத்தில் ஏழைக் குடும்பத்திற் பிறந்தான். அவனுடைய தகப்பனுக்கு மாதச்சம்பளம் ரூபாய் எட்டே. அவருடைய குடும்பம் பெரிது. வரும்படியோ கொஞ்சம். அதனல் அக் குடும்பம் பட்ட கஷ்டம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது.

ஐந்து வயதானதும், ஈசுவர சந்திரன் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் சென்று படித்து வந்தான். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதற்கேற்ப அவன் இளமைப் பிராயத்திலேயே மிகப் புத்திசாலியாய் இருந்தான். அவனது அறிவைக் கண்டோர் வியந்தனர். ஆயினுமென்ன! அவனே ஏழைக் குடும்பத்திற் பிறந்தவன்; அவன் படிப்பதற்குப் போதுமான சாதனங்கள் ஒன்று மில்லை.

ஒன்பது வயதானவுடன் ஈசுவரனை அவனது பிதா அதிகக் கஷ்டப்பட்டுக் கல்கத்தாவிற்கு அனுப்பினர். அங்கு அவன் வடமொழி கற்றுவரலானன். அச்சமயம் அவன் பட்ட கஷ்டம் அதிகம். அவனது தகப்பனரும், சகோதரனும் இவனுடன் வசித்து வந்தனர். வீட்டு வேலைகளை எல்லாம் ஈசுவர சந்திரனே செய்து

வந்தான்; சமைப்பதும் அவனே; விறகு வெட்டுவதும் அவனே. வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்பவனும் அவனே. இவ்வளவு வேலையும் செய்த போதிலும் படிப்பிலும் அதிகக் கவலையெடுத்து உழைத்து வந்தான். தன் வகுப்பிலும் முதன்மையாய் இருந்து வந்தான்.

பிள்ளைகளே! 'வீட்டு வேலைகளை எல்லாம் செய்துவந்த ஈசுவர சந்திரனுக்குப் படிக்க நேரம் எங்கிருந்தது?' என்று கேட்கலாம். அவன் புத்திக்கூர்மை யுள்ள பையன் என்று சொன்னேனும் அல்லவா! புத்திக் கூர்மையுடன் அவன் மிக்க உழைப்பும், ஊக்கமும், விடா முயற்சியும் உள்ளவன். எக் கஷ்டம் வந்தாலும் அவன் மனத்தளர்ச்சி அடையவில்லை. ஊக்கத்துடன் மேன்மேலும் உழைத்து வந்தான். பகலில் வீட்டு வேலைகளைப் பார்த்துவிட்டு இரவில் வெகுநேரம் படிப்பான். இரவில் அவன் இரண்டு மணி நேரமே தூங்குவான். சமையல் செய்து கொண்டிருக்கும் போதும், பள்ளிக்கூடத்திற்குப் போகும் போதும், திரும்பி வரும் போதும் புத்தகங்களைப் படித்துக் கொண்டும் இருப்பான். ஒரு நிமிஷத்தையும் கூட அவன் வீணாகக் கழிக்க விரும்ப மாட்டான்.

பிள்ளைகளே! பலவித இடையூறுகள் இருந்தபோதிலும், ஈசுவர சந்திரன், மனச் சலிப்படையாமலும், தேக சிரமத்தைப் பாரா மலும், சோம்பலை ஒழித்து கல்வி கற்பதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்ததாலன்றே இளமையிலேயே அவர் "வித்தியாசாகரர்" (கல்விக் கடல்) என்னும் பட்டம் பெற்றார்.

"வேலையிற் சோம்பலை விட்டு நீ முயலு.
முயலும் வேலையை முடித்திடப்பழகு."

---

14. தேசிங்கு.

சுமார் இருநூறு வருடங்களுக்கு முன் செஞ்சிக் கோட்டையைச் சிரோப்சிங் என்பவர் அரசாண்டார். அவருடைய மகன் தேசிங்கு. இளமையிலேயே வில்வித்தை, வாள் வித்தை, சிலம்ப வித்தை முதலியவைகளில் தேர்ச்சி பெற்று அஞ்சா நெஞ்சம் படைத்த அரச குமாரனாய் விளங்கினான்.

அக் காலத்தில் டில்லி நவாபான ஷா ஆலம் என்பவரிடத்தில் ஒருவராலும் அடக்க முடியாத ஒரு முரட்டுக் குதிரை இருந்தது. பல வீரர்கள் அதை அடக்க முயன்றும் முடியாமல் தோல்வி யுற்றனர்; முடிவில் சிரோப் சிங் முயன் றார். அவரும் அபஜெயமே அடைந்தார்; அத

ஞல் வெட்கமடைந்த அம்மன்னரும் தம் நகர் செல்லாது டில்லியிலேயே தங்கினர்.

தன் தந்தை, நகர் திரும்பி வராத காரணத்தை மனவலிமை மிக்க தேசிங்கு அறிந்தான். உடனே டில்லிக்குப் புறப்பட்டான். நவாப் இருக்குமிடம் சென்று, நேரில் கண்டு அந்த அடங்காக் குதிரையை அவன் அடக்கித் தருவதாகச் சொன்னன். சிறுவனை தேசிங்கின் தைரியமான வார்த்தைகளைக்கேட்ட ஷா ஆலம் "பையா! நீ யாவது குதிரையை அடக்குவதாவது? எவ்வளவோ பெரிய வீரர்களால் செய்ய முடியாத காரியத்தை நீ எங்ஙனம் செய்வாய்? ஆதலால் நீ இந்த எண்ணத்தை விட்டு நின் ஊர் செல்க" என்றார். எவ்வளவு சொல்லியும் தேசிங்கு கேட்கவில்லை; கட்டாயம் அக் குதிரையைத் தான் அடக்கி விடுவதாகப் பல தரம் சொல்லி வலியுறுத்தினன். அவரும் அவன் வேண்டுகோளுக்கு இணங்கினர்.

குதிரைப் பந்தியிலிருந்து, பல மல்லர்கள் அக்குதிரையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு வந்து ஒரு பெரிய மைதானத்தில் நிறுத்தினர்கள். சிறுவனை தேசிங் மன ஊக்கத்துடன் அக்குதிரையின் அருகில் சென்றன். மல்லர்கள் குதிரையைப் பிடித்துக் கொண்டிருக்கும்போதே அதன் மீது தாவி ஏறினன். உடனே மல்லர்

கள் அப்பால் சென்றனர். தன்மீது ஆள் ஏறி இருப்பதை அறிந்த குதிரை மிகவும் கோபங் கொண்டது. தேசிங்கைக் கீழே தள்ளிவிடத்தன் னால் ஆனமட்டும் முயன்றது. நாலுகால் பாய்ச் சலில் மைதானத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது. தேசிங்கோ, கடிவாளத்தைப் பிடித்த பிடியோடு அதன் மேல் படுத்திருந்தான்; அசைந்தா னில்லை; அச்சமு மடைந்தானில்லை. நாழிகை ஆக ஆக, குதிரையும் களைப்படைந்தது' ஓட முடியாமல் நின்றது. உடனே தேசிங்கும் அதனை ஷா ஆலம் முன்பு கொண்டு வந்து நிறுத்தினன். இந்தச் சம்பவத்தைப் பார்த் திருந்தோர் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. தன் மகனின் வீரச் செயலைக் கண்ணால் கண்ட அவன் பிதா அடைந்த ஆனந்தத்திற்கும் அளவுண்டோ! மகிழ் வடைந்த ஷா ஆலமும் தேசிங்குக்கு வேண்டிய பரிசளித்து 'ராஜா தேசிங்கு' என அழைத்தார்.

---

15. நெல்ஸன்.

சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கு முன், இங்லாந்தில் நெல்ஸன் என்னும் சிறுவன் இருந்தான். அவன் அதிகமான தேக பலமில் லாதவன்; வயதுக்குத் தக்க வளர்ச்சியும் அவ னிடம் இல்லை. ஆனால் அவன் பயமென்பதை

இன்னதென்று அறியாத பையனும் மன வலிமை உள்ளவனும் இருந்தான்.

இவன் பன்னிரண்டாம் வயதில் 'கப்பலில்' வேலைக் கமர்ந்தான். இவனிருந்த கப்பல் ஒரு சமயம் வட துருவம் நோக்கிச் சென்றது. அந்தப்பக்கத்தில் குளிர் மிகுதி. பனிக்கட்டி பூமியில் உறைந்திருக்கும். சமுத்திரத்தில் தண்ணீரும் உறைந்திருக்கும். நெல்லன் சென்ற கப்பல் அங்கு சில நாள் தங்க வேண்டி இருந்தது.

ஒரு நாளிரவு நெல்லன் ஒரு பெரிய வெள்ளைக் கரடியைத் தன் கப்பலுக்குச் சமீபத்தில் கண்டான். உடனே தன் நண்பனொருவனைக் கூட்டிக்கொண்டு அக் கரடியை வேட்டையாடுவதற்காகப் புறப்பட்டான். பிள்ளைகளே! இச்சிறுவனின் தைரியத்தைப் பார்த்தீர்களா!

சிறுவர்களைக் கப்பலில் காணுததால் கப்பலில் இருந்தோர் அவர்களைத்தேட ஆரம்பித்தனர்; சிறிது நேரத்தில் கரடியின் சமீபத்தில் நின்றுகொண்டிருப்பதைக் கண்டனர். உடனே கப்பல் தலைவன் அவர்களை வந்துவிடும்படி கூவி அழைத்தான். நெல்லனுடன் சென்ற நண்பன் திரும்பி விட்டான். ஆனால் நெல்லனோ "அக்கரடியைச் சுட்டே திரும்புவேன்" என்றான். பையனிருந்த அபாய நிலையை அறிந்த கப்பல் தலைவன் கரடியைப் துப்பாக்

கியால் சுட்டான்; குறி தவறியது; சத்தத்தைக் கேட்ட கரடி ஓடிவிட்டது. நெல்லனும் கப்பலை நோக்கித் திரும்பினன். அவனை நோக்கி "உன்னைக் கூப்பிட்டவுடன் நீ ஏன் திரும்பி வரவில்லை" என்று கப்பல் தலைவன் நெல்லனைக் கேட்டான். "நான் அந்தக் கரடியைக் கொன்று அதன் தோலை என் தகப்பனருக்குக் கொடுக்க நினைத்தேன்" என்றான் நெல்லன்.

---

16. டெல்' என்பவனின் புத்திரன்.

ஐரோப்பாக் கண்டத்தில் ஸ்விட்ஸர்லன்ட் என்று ஒரு மலை நாடு இருக்கிறது. அதில் டெல் என்ற ஒரு வேடன் வசித்து வந்தான்; மகா பராக்கிரமம் பொருந்தியவன்; வில் வித்தையில் தேர்ந்தவன்; குறிதவறாது எய்யும் வல்லமை வாய்ந்தவன். "தந்தை எப்படி தனயன் அப்படி" என்ற பழமொழிக் கேற்ப அவனுக்குத்திட சித்தமுள்ள ஒரு மகன் இருந்தான்.

அக்காலத்தில் அந்நாட்டை ஒரு கொடுங் கோல் மன்னன் ஆண்டு வந்தான்; அவன் குடிகளை வருத்தும் கொடியவன். டெல்லின் புகழைக் கேட்ட அவன் பொறுமையே கொண்டான். அவனைத் தொலைக்கவும் வழி தேடினன்:

ஒரு நாள் ஒரு கம்பத்தின் மேல் தன் தொப்பியை வைத்து அனைவரும் அதைப் பணியவேண்டுமென்று கட்டளை இட்டான். அவ்வாறு பணிய மறுத்தோரைக் கொலைசெய்யவும் உத்திரவளித்தான். "கடவுளன்றி வேறு யாரையும் வணங்காத நான் இத்தொப்பிக்கோ தண்டனிடுவேன்! ஒருக்காலும் முடியாது" என்றான் டெல். அதனால் காவலாளர்கள் அவனைப் பிடித்து அரசன் முன் கொண்டுபோய் நிறுத்தினர். அவனைக் கண்ட அரசனும் டெல்லைத் தண்டிக்கத் தக்க சமயம் வாய்த்தது என மகிழ்ந்தான். பின் அவனை நோக்கி என் கட்டளையை மீறிய உனக்கு மரண தண்டனை விதிப்பதே நியாயம். ஆயினும் உன்னைக் கொல்ல எனக்கு மனமில்லை. எல்லோரும் உன்னைப் பெரிய வில்லாளி எனப் புகழுகின்றார்களே! எதோ! பார்க்கலாம்! உன் தனயன் தலையில் ஒரு 'ஆப்பிள் பழத்தை வைத்து நூறு கெஜதூரத்திற் கப்பால் நிறுத்துவேன். நீ அதைக் குறி வைத்து அம்பெய்து இரண்டு துண்டுகளாகச் செய்தால் உன்னை மன்னித்து உனக்கு உயிர்ப் பிச்சையும் தருவேன். அப்படி ஆப்பிள்பழம் இரண்டு துண்டங்களாகப் போகாமல் இருந்தாலும் சரி, அல்லது உன் குறி தவறி உன் மகன்மேல் அம்புபட்டு அவன் இறந்தாலும் சரி; நான் உன்னைக் கொல்லும்படி உத்திரவிடுவேன்" என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட டெல்லின் மனம் பட்டபாடு கடவுளுக்கே தெரியும். 'பையன் அம்பைக்கண்டு அச்சத்தால் சிறிது அசைந் தாலும், தன்குறி சிறிது தவறினாலும், தன் மகன் இறந்துவிடுவான்' என்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். அதனால் தன் திறமையை வேறு வழி யில் பரீக்ஷிக்கும்படி அக்கொடியோனை மன்றாடிக் கேட்டுக்கொண்டான். எவ்வளவு சொல்லியும் அக்கொடுங்கோன் மன்னன் ஒரே பிடிவாதமாய்த் தான் சொன்னதையே செய்யவேண்டு மென்றான்.

இவர்கள் பேசியதை உற்றுக்கேட்ட சிறுவன் தன் தந்தையைநோக்கி "அப்பா! நீங்கள் ஒன் றுக்கும் அஞ்சவேண்டாம். உங்களது குறி தப் பாது என்பது எனக்குத் திண்ணமாய்த் தெரியும். நான் பயந்து சிறிது அசைந்து விடுவேனென்று நீங்கள் பயப்படுகிறீர்கள். அந்தப் பயம் உங் களுக்கு இம்மியும் வேண்டாம். நான் சிறிதும் அசையாமல் தைரியத்துடன் நிற்கிறேன், சற்றும் யோசியாமல் நீர் எடும் வில்லை, தொடும் அம்பை; பெறுவோம் விடுதலை" என்றான்.

இவனது வீரமொழிகளைக் கேட்ட தந்தை மனத்திடங் கொண்டான். கடவுளின் பேரில் பாரத்தைப் போட்டு வில்லை எடுத்தான். குறி வைத்து எய்தான். கண்டோர் வியக்க ஆப்பிள் பழம் இரண்டு துண்டுகளாய்க் கீழே விழுந்தது.

பிள்ளைகளே! எட்டுவயதும் நிரம்பாத இந்தப் பையனின் திறத்தைப் பார்த்தீர்களா!

"ஊக்கமுள்ளவன் உயர்நிலை அடைவான்."

---

17. எட்வர்ட்.

இங்கிலாந்தில் எட்வர்ட் என்ற அரசிளங் குமான் ஒருவன் இருந்தான். அவன் மிகுந்த பலஹீனமுக இருந்த போதிலும் சமயோசித புத்தியும் டெல்லின் குமாரனைப் போல் மனை தைரியமும் வாய்த்தவன். தன் மூத்த சகோதரி யாகிய "எலிஸபெத்தை" நன்கு நேசித்து வந் தான். இவன் பத்தாம் வயதில் இங்கிலாந்தின் அரசனுனதால் இவனைப் "பையனை அரசன்" என்றும் சொல்வது வழக்கம்.

பன்னிரண்டாம் வயதில் ஒரு நாள் இவன் தன் சகோதரியுடன் குதிரை ஏற்றம் பயின்று கொண்டிருந்தான். இவன் சகோதரி ஒரு முரட்டுக் குதிரையின் பேரில் சவாரி செய்து கொண்டிருந்தாள். அக்குதிரை திடீரென்று சுவரைத்தாவி, அதன் பின் புறம் ஓடிக்கொண் டிருந்த நதியில் போய் விழுந்தது. எலிஸபெத் தும் தண்ணீரில் வீழ்ந்து மூழ்கினுள்.

எதிர் பாராத இந்த ஆபத்தைக் கண்ட எட்வர்ட் எள்ளளவும் தாமதியாமலும், பயப் படாமலும், மற்றொரு குதிரை மேல் ஏறி,

அந்த மூரட்டுக் குதிரையைப்போல் கவரைத் தானும் குதிரையுடன் தாவிப் பிரவாகத்தில் விழுந்தான். பின் தண்ணீரில் நீந்திச் சென்று தன் சகோதரியைக் கைப்பற்றினன். அதிக அபாயத்திலிருந்த அவளும் அவளுடைய சகோதரனுல் காப்பாற்றப்பட்டாள்.

"தைரிய மிருப்பது சமயத்துக் குதவி."

---

18. ஸபக்டஜின்.

சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன் ஸபக்டஜின் ஆப்கானிஸ்தானத்து அரசனுக இருந்தான். அவன் இளமையில் மிகவும் ஏழையாய் இருந்தவன். அக்காலத்தில் அவனிடம் ஒரு குதிரையைத்தவிர வேறு ஒன்றும் இல்லை. அவன் அதன்மீது ஏறி வனங்களிற் சென்று வேட்டையாடி ஜீவனம் செய்துகொண்டு வந்தான்.

ஒரு நாள் காட்டிற்கு வேட்டையாடப் போனன். அன்று அவனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. வெகுநேரத்திற்குப்பின் ஒரு பெண் மான் தன் குட்டிக்குப் பால் கொடுத்துக்கொண்டிருப்பதைக் கண்டான். சந்தோஷம் கொண்டான். தன் குதிரையை அதன் சமீபத்திற் செலுத்தி அந்த மான்குட்டியை மாத்திரம் பிடித்துக் கொண்டான். பிறகு அக்குட்டியுடன் அவன் வந்தவழியே ஊர் நோக்கித் திரும்பினன்.

தன் குட்டியை இழந்த பெண்மான் பட்ட வருத்தம் இவ்வளவென்று அளவிட்டுச் சொல்ல முடியாது. அதை விட்டுப்பிரிய மனமில்லாது தன்குட்டியைக்கொண்டுபோகும் ஸபக்டஜினைப் பின் தொடர்ந்து சென்றது. அவன் தன் பின் வரும் மானின் பரிதாப நிலையைப் பார்த்தான். பார்த்ததும் அவன் மனம் இளகிவிட்டது. குட்டியை அதன் தாயுடன் செல்லவிட்டு, வெறுங் கையுடன் திரும்பி வீடுசென்றான். இதைக்கண்டு சந்தோஷங் கொண்ட பெண்மான் தன்குட்டியுடன் காட்டிற்குள் ஓடி மறைந்தது.

பிள்ளைகளே! ஸபக்டஜினுக்கு இருந்த ஜீவ காருண்யத்தைப் பார்த்தீர்களா? வாயில்லாப் பிராணிகளிடம் அவன் காட்டிய அன்பு யாவராலும் பாராட்டத்தக்கது அல்லவா?

"இரக்க முள்ளவர் எவர்க்கும் நல்லவர்."

---

19. கௌதமன்.

நமது தேசத்தில் இமயமலைச் சாரலில் கபிலவஸ்து என்ற ஒரு பட்டணம் இருந்தது. அதில் கௌதமன் என்ற அரசிளங் குமரன் இருந்தான். அவன் மிகுந்த தேக பலமும், மன வலியும் உள்ளவன். அத்துடன் ஜீவப்பிராணிகளிடத்தில் இளமையிலிருந்தே மிகுந்த அன்புடையவன். அவைகள் வருந்தச் சகியான்.

ஒரு நாள் இவன் தனது மைத்துனனுடன் நந்தவனம் சென்றான். அந்தச்சமயம் மைத்துனன் ஒரு பறவையை அம்பால் எய்தான். அம்பு தைத்தஉடன் பறவை நிலத்தில் விழுந்தது. தைத்த அம்பினால் உண்டான வலி பொறுக்க முடியாமல் துடிதுடித்துப் பரிதாபகரமான நிலைமையில் அலறியது.

இதைக்கண்ட உடன் கௌதமன் அவ்விடம் ஓடினான். பறவையைக் கையிலெடுத்தான். அதனுடன் தானும் வருந்தினான். அம்பினால் உண்டாகிய காயத்தில் மருந்துவைத்துக் கட்டி அதன் வருத்தத்தைச் சற்று நீக்கினான்.

மைத்துனன் தான் அம்பு எய்து வீழ்த்திய பறவையைத் தன்னிடம் கொடுக்க வேண்டுமென்று கௌதமனைக் கண்டிப்பாய்க் கேட்டான். கௌதமனோ அதைக் கொடுக்க முடியாதென மறுத்து விட்டான். அதனால் இருவருக்கும் மனஸ்தாபம் உண்டாகியது. அதைப்பற்றிக் கௌதமன் கொஞ்சமும் கவனிக்க வில்லை. பறவையோடு அரண்மனை சென்றான். அதனை அன்போடு பாதுகாத்து வந்தான்.

அது முற்றிலும் சௌக்கிய மடைந்த உடன் பறந்து போகும்படி விட்டு விட்டான். இக்கௌதமனே பின்காலத்தில் ஜீவஹிம்சை

கூடாது என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட புத்தமதத்தை உலகத்தாருக்குப் போதித்து என்றும் அழியாப் புகழ்பெற்றவன்.

"கௌதம புத்தர் காருண்ய முத்தர்."

---

20. கெயஸ்மியூஷியஸ்.

இத்தாலிய தேசத்தின் தலைநகரான ரோமாபுரியின்மேல் அதன் பகையரசன் படை எடுத்தான். அந்நகரைப் பிடிப்பது கஷ்டமெனக்கண்டவுடன் முற்றுகை இட்டான். ரோமர்கள் தன்னைச் சரணமடையச் செய்ய வேண்டுமென்பது அவனது நோக்கம். ஆதலால் ரோமாபுரியிலுள்ள ஜனங்களுக்கு வெளியிலிருந்து ஆகாரம் வராத படி தடை செய்தான்.

அக்காலத்தில் அந்நகரில் கெயஸ்மியூஷியஸ் என்னும் துணிவுள்ள சிறுவன் ஒருவன் இருந்தான்; உற்சாகத்துடன் தேக வலிமையும் உள்ளவன்; தேசபக்தி நிறைந்தவன். தன் நாட்டார் பசியின் கொடுமையால் வருந்துவதைப் பார்க்க அவன் மனம் சகிக்க வில்லை. பகையரசனைக் கொன்று பகைவர்களை நாட்டை விட்டுத் துரத்தவேண்டுமென்று நினைத்தான். உடனே ஆயுதபாணியாய் மாறுவேஷத்துடன் பகைவர் படையிற் சென்று புகுந்தான்.

அங்கு அதிக விலையுயர்ந்த ஆடைகளை அணிந்து, அங்குள்ளவர்களை வேலை செய்யும் படி ஏவிக்கொண்டிருந்த ஒருவனைக் கண்டான். அவனையே மியூஷியஸ் தன் விரோதிகளின் இறைவன் என எண்ணினான். உடனே அவன் மேற்பாய்ந்தான்; கத்தியால்குத்தினான். உண்மையில் அவன் அரசனின் காரியதரிசியே.

உடனே அவனைக் காவலர்கள் பிடித்து அரசன் முன் நிறுத்தினர். நிகழ்ந்ததைப் பணிவுடன் உரைத்தனர். கோபங்கொண்ட அரசனும் அவனை நோக்கி "அடே பயலே! உனனுடன் சேர்ந்தவர்கள் யார்? அவர்கள் எங்கிருக்கிறார்கள்? உங்களுடைய எண்ண மென்ன? உள்ளதை உள்ளபடி உரையா விட்டால் உனனைச் சித்திரவதை செய்வேன். இதோ இந்த நெருப்பிலிட்டு வாட்டுவேன்" என்றான்.

இவைகளைக் கேட்ட அத்தீரனை சிறுவன், சிறிதும் அஞ்சாமல் அவனை நோக்கி "அரசே! உன் உருட்டிற்கும், புரட்டிற்கும் நான் சிறிதும் அஞ்சேன். நீ எந்த விதமாக என்னைச் சித்திரவதை செய்த போதிலும் இரகசியங்களை உன்னிடம் சொல்லேன். மனோதிடத்துடன் இருக்கும் என்னை உன்னால் ஒன்றும் செய்ய முடியாது" என்று சொல்லி அங்கு எரிந்துகொண்டிருக்கும் நெருப்பில் தனது வலது கையை நீட்டினான்.

கையும் எரிய ஆரம்பித்தது. முகத்தைக் கொஞ்சங்கூடச் சுளிக்காமல் தைரியத்துடன் நின்ற அச்சிறுவனின் தேசாபிமானத்தையும், வீரச் செய்கையையும் கண்ட அரசனும் மற்றோரும் அளவில்லாத ஆச்சரியங்கொண்டனர்.

உடனே அவனை ஒன்றும் செய்யாமல் அவன் இஷ்டப்படி போக விடை கொடுத்தான்.

பிள்ளைகளே! கெயஸ்மியூஷியனுடையபோக்கையும் அவனுடைய தேச பக்தியையும் கவனித்தீர்களா? தன் நாட்டு ஜனங்களுக்காக அவன் உயிரையுங் கொடுக்கத்துணிந்து செய்த வீரச்செய்கையி லிருந்து அவனது தேசத்திற்கே ஒரு பெரும் நன்மை உண்டாயிற்று. இஃதன்றோ தேசாபிமானம்!

"தேசாபி மானி தெய்வமே யாவன்."

முற்றிற்று.

126824

B52
1458

